பக்கங்கள் 19+4

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு




முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 21 வியாழக்கிழமை 04.07.2024 அதிர்வு 339




# பெருந்தலைவரின் புகழுடலுக்கு யாழில் இன்று பலரும் அஞ்சலி!



(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தனின் புகழுடல் இன்று யாழ்ப்பாணத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் புகழுடல் இன்று காலை கொழும்பில் இருந்து விசேட விமானம் மூலம் பலாலி விமான நிலையத்துக்கு எடுத்துவரப்பட்டது. அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் முற்பகல் 10.15 மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

02 ▶

மேலும் படங்கள் 2,3,4,5,6ஆம் பக்கங்களில்




உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# பெருந்தலைவரின் புகழுடலுக்கு யாழில் இன்று பலரும் அஞ்சலி!

( முதலாம் பக்கத் தொடர்ச்சி )

இதன்போது சம்பந்தனின் புகழுடலுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொடி போர்த்தப்பட்டு கௌரவம் செலுத்தப்பட்டதோடு தலைமைக் காரியாலத்தில் கட்சிக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.


அதன் பின்னர் இரா.சம்பந்தனின் புகழுடல் யாழ். நகர் பகுதியூடாக ஊர் வலமாக எடுத்துவரப்பட்டு 11.30 மணியளவில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் பி.எச்.எம்.சார்ள்ஸ், இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், தர்மலிங்கம் சித்தார்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ஈ.சரவணபவன், சுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் ப.சத்தியலிங்கம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், கட்சிப் பிரமுகர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் உட்படப் பலர் அஞ்சலிகளைச் செலுத்தி வருகின்றனர்.

சம்பந்தனின் புகழுடல் நாளை காலை யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தில் இருந்து திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இறுதிக் கிரியைகள் இடம்பெறவுள்ளது என்று நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.



























# பெருந்தலைவரின் புகழுடலுக்கு யாழில் இன்று பலரும் அஞ்சலி!













# யாழில் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் பெருந்தலைவர் சம்பந்தனின் புகழுடலுக்கு அஞ்சலிப்பு







**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன், பிரபாகரன் டிலக்சன்)**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனின் புகழுடலுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் பலரும் அஞ்சலி செலுத்தினர்.

விசேட விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு இன்று காலை எடுத்துவரப்பட்ட சம்பந்தனின் புகழுடல் அங்கிருந்து கார் மூலம் யாழ். மார்டின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதன்போது சம்பந்தனின் புகழுடலுக்குத் தமிழரசுக் கட்சியின் கொடி போர்த்தப்பட்டு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, கட்சியின் மூத்த தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், ஏனைய கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்குக்குக் கொண்டு செல்லப்பட்ட சம்பந்தனின் பூதவுடலுக்கு இன்று மாலை 4 மணி வரை அஞ்சலி செலுத்த முடியும் என்று தமிழரசுக் கட்சியினர் அறிவித்துள்ளனர்.









# யாழில் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் பெருந்தலைவர் சம்பந்தனின் புகழுடலுக்கு அஞ்சலிப்பு





















# யாழில் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் பெருந்தலைவர் சம்பந்தனின் புகழுடலுக்கு அஞ்சலிப்பு













**நமது கருத்து**
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# எங்கப்பன் குதிருக்குள்ளா?

அரசியல்வாதிகளும் அரசியல் சம்பந்தப்பட்ட விடயங்களைக் கையாள்வோரும் நாட்டின் மக்களை முட்டாள்களாக எண்ணக்கூடாது.

நாட்டு நடப்புகளைக் கணக்கில் எடுத்து, கூட்டி, கழித்து, பிரித்து, வகுத்து, பெருக்கிப் பார்க்கும் ஊகிப்புத் திறன் மக்களுக்கு நன்கு உண்டு. பனை மரத்தின் கீழ் இருந்து குடிப்பது பாலா, கள்ளா என்பதைத் தொலைவில் இருந்தே ஊகித்து அடையாளம் காணும் அசாத்தியத் திறன் அவர்களுக்கு இருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தல் எப்போது என்ற சர்ச்சை கடந்த நான்கு, ஐந்து மாதங்களாக வலிமையாக நீடித்த போது வாயை மூடிக் கொண்டு அம்சடக்காக அமைதி காத்த ஜனாதிபதி -

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை மேலும் ஓராண்டுக்கு நீடிக்கலாம் என்று அண்மைக்காலம் வரை தமது கட்சியின் செயலாளர் மூலம் அறிவிப்புக்களை வெளியிடச் செய்து பார்த்துக் கொண்டிருந்த ஜனாதிபதி -

இப்போது, திடீரென ஜனாதிபதி ஒருவரின் பதவிக்காலம் 5 வருடங்கள்தான், அதை உறுதியாகத் தாம் நம்புகின்றார், இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்குத் தாம் ஆதரவளிக்கின்றார் என்றெல்லாம் தமது ஊடகப் பிரிவு மூலம் அறிக்கை வெளியிட வைத்திருக்கின்றார்.

அதேசமயம் அந்த அறிவிப்பை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள ஒரு தகவல் 'சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை' என்பதை அம்பலப்படுத்தி நிற்பதும் கண்கூடு.

அவரின் அந்தத் தகவல் 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்ற கருத்தில் உண்மையை ஒப்புக் கொள்வதாக இருப்பதுதான் இதில் வேடிக்கை.

ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்வதற்கு முன்னர் அந்த மனுவைத் தாக்கல் செய்த சமிந்திர தயான் லெனவ என்பவர் தன்னிடமோ அல்லது தனது சட்டத்தரணிகளுடனோ அது தொடர்பில் கலந்தாலோசிக்கவோ, ஆலோசனை செய்யாவோ இல்லை என்று ஜனாதிபதி கூறியிருக்கின்றமை 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்ற கதைதான் என்பது புரிவதற்கு மக்களுக்கு அதிக நேரம் செல்லாது.

தவிரவும், இந்த மனு தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் வழமைக்கு மாறான அணுகுமுறையும் மக்கள் மனதில் சில சந்தேகங்களை எழுப்பாமல் இல்லை.

இந்த மனுவை விசாரிப்பதற்கு மட்டும் பிரதம நீதியரசர் திடீரென ஐந்து நீதியரசர் கொண்ட ஆயம் ஒன்றை விசேடமாக நியமித்திருக்கின்றார்.

நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது என சான்றுரைக்கப்பட்ட ஒரு சட்டத்தின் செல்லுபடி தன்மை குறித்து உயர் நீதிமன்றம் ஆராயமாட்டாது, இது தொடர்பான அரசமைப்பு ஏற்பாடு தெளிவானது என மூன்று நீதியரசர்கள் கொண்ட ஆயம் மிக அண்மையில்தான் நிகழ்நிலைக்காப்புச் சட்டத்தின் செல்லுபடி தொடர்பான வழக்கில் தீர்ப்பளித்திருந்தது.

இப்போது உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை வழக்கில் ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் 19 ஆவது அரசமைப்பு திருத்தம் நிறைவேற்றப்பட்ட போது முன்னெடுக்கப்பட்ட முறைமைதான் ஆட்சேபத்துக்கு உரியதாக முன்வைக்கப்பட்டுள்ளது. அதாவது 19 ஆவது திருத்தச் சட்டத்தின் செல்லுபடி தன்மைதான் கேள்விக்குள்ளாக்கப்படுகின்றது.

ஆனால் நிகழ்நிலைக் காப்புச் சட்டம் தொடர்பில் மூன்று நீதியரசர்கள் ஆயம் அளித்த தீர்ப்பு ஒன்று முன்னுதாரணக் கட்டுப்பாட்டுத் தீர்ப்பாக உள்ளது.

அதை மீறி, அந்தத் தீர்ப்பைப் புறந்தள்ளி, ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தின் செல்லுபடி தன்மையை கேள்விக்கு உட்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுப்பதாயின் ஏற்கனவே தீர்ப்பு வழங்கிய மூன்று நீதியரசர்கள் ஆயத்திலும் விட மேம்பட்ட ஒரு நீதிமன்றத்தினால்தான் அது முடியும்.

அதனால்தான் வழமைக்கு மாறாக இந்த மனுவை ஒட்டி மட்டும் விசாரிப்பதற்கு எடுத்த எடுப்பிலேயே ஐந்து நீதியரசர்கள் கொண்ட ஆயம் நியமிக்கப்பட்டிருக்கின்றதோ என்ற சந்தேகம் இயல்பாகவே மக்களுக்கு எழுவது தவிர்க்க முடியாததாகின்றது.

அதுவும் திடீரென ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள் என்று ஜனாதிபதி அறிவிக்கின்றார். எனக்கும் மேற்படி வழக்குக்கும் தொடர்பு இல்லை என்றும் அவர் கூறுகின்றார். அந்தச் சமயத்தில் ஐந்து நீதியரசர்கள் ஆயம் திடுதிப்பென நியமிக்கப்படுகின்றது.

இவற்றையெல்லாம் கூட்டிக் கழித்து, பெருக்கிப் பிரித்து, வகுத்து, பார்க்கும் திறன் மக்களுக்கு இல்லாமல் இல்லை.

நீதிமன்றத்தினால் வரக்கூடிய - எதிர்பார்க்கப்படுகின்ற - உத்தரவுக்குத் தாம் காரணம் அல்லர் என்பதை ஜனாதிபதி முற்கூட்டியே தெளிவுபடுத்தி, தம்மை விடுவித்துக் கொள்கிறார் என்பது தெளிவு.

# கம்பஹாவில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக்கு காரணங்களை ஆராய விசேட நடவடிக்கை

கம்பஹா மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக்கான காரணங்களை ஆராய்வதற்காக விசேட நடவடிக்கை ஒன்று அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

கம்பஹா மாவட்டத்தில் உள்ள பிரதான கால்வாய்கள் மற்றும் நீர் வழித்தடங்களைக் கண்காணித்து நீர் வடிகால் தடைகளை கண்டறிய எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹிரான் பாலசூரிய தெரிவித்தார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைவாக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தால் இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, கூட்டுத்தாபனத்தின் தலைவர், மேலதிக பொது முகாமையாளர் (அமுலாக்கம்) தலைமையிலான பல உயர் அதிகாரிகள் கம்பஹா மாவட்ட செயலக அதிகாரிகள் மற்றும் நீர்ப்பாசன உத்தியோகத்தர்களுடன் சீதுவைக்கு அருகில் உள்ள நீர்கொழும்பு தடாகத்தின் முகத்துவாரத்துக்கு அருகில் தடுகங் ஓயா மற்றும் அத்தனகலு ஓயா வெள்ளப்பெருக்கை அவதானித்தனர்.

தடுகங் ஓயாவை அண்மித்த ஆற்றின் கரையில் மண் மேடுபடுவதால் சில இடங்கள் குறுகலாக மாறியுள்ளது என்றும் பல்வேறு நீர்வாழ் தாவரங்கள் மற்றும் ஆக்கிரமிப்பு தாவரங்கள் மற்றும் பல்வேறு அனுமதியற்ற கட்டுமா னங்களால் நீர் தடைப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது என்று தலைவர் தெரிவித்தார்.

இந்த முறைகேடுகளை நீக்கி நீர்வழிப்பாதைகளை அகலப்படுத்துவது மற்றும் அனுமதியற்ற கட்டுமானங்களை அகற்றி அடைப்புகளை குறைப்பது குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைய கம்பஹாவை வெள்ள அபாயத்தில் இருந்து காப்பாற்ற மும்முனை வேலைத்திட்டம் அடையாளம் காணப்பட்டு குறுகிய கால தீர்வுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.



இடைக்கால மற்றும் நீண்ட கால தீர்வுகளை அடையாளம் காணும் பணியும் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறுகிய காலத் தீர்வுகள் மூன்று மாதங்களுக்குள் முடிக்கப்பட்டு, இடைக்கால மற்றும் நீண்ட கால தீர்வுகளை நடைமுறைப்படுத்துவது தொடங்கும் என்றும் அவர் கூறினார்.

கம்பஹா மாவட்டத்தில் தடுகங் ஓயா, ஜா எல, மாகிலன்கம ஓயா, உருவல் ஓயா, குந்திவல கால்வாய், மாபலம் ஓயா, தடுலங்க கால்வாய், தீ எலி ஓயா, அத்தனகலு ஓயா என 09 பிரதான நீர்வழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த கால்வாய்களில் நீர் வடிகால் இரண்டு முக்கிய புள்ளிகளில் இருந்து நடைபெறுகிறது. அவை ஜா எல மற்றும் தடுகங் ஓயா ஆகும்.

பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு அனுமதியற்ற மற்றும் முறையற்ற கட்டுமானங்கள் காரணமாக அத்தனகல்லு படுகையில் தற்காலிக நீர் பிடிப்பு பகுதிகள் வேகமாக குறைந்து வருகின்றன.

அத்துடன் கடந்த காலங்களில் ஏற்பட்ட காலநிலை மாற்றம் மற்றும் பிரதேசங்களில் நீர் வடிகால் அமைப்பில் அடைப்பு ஏற்பட்டதன் காரணமாக கடந்த காலங்களில் பெய்த கடும் மழை காரணமாக கம்பஹா நகரம் வெள்ளத்தில் மூழ்கியமை குறிப்பிடத்தக்கது.



# மருதமுனை வி. கவுக்கு காலணிகள் கையளிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மருதமுனை நஷனல் ஸ்டார் விளை யாட்டுக் கழகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க முதற்கட்டமாக அந்தக் கழகத் துக்கான காலணிகளை மயோன் குறூப் முகாமைத்துவ பணிப்பாளர் றிஸ்லி முஸ்தபா வழங்கி வைத்தார்.

இதன்போது அமைப்பின் செயலாளர் திடீர் மரண விசாரணையாளர் அல் ஜவாஹிர், பிரதித் தலைவர் சுகைல் ஜமால்டீன், ஆலோசகர் றிஜா மற்றும் கழக நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டனர்.




# மருதமுனை அல்-ஹம்றா வித்திக்கு ஒலிபரப்பு உபகரணங்கள் வழங்கல்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட மருதமுனை அல் – ஹம்றா வித்தியாலயத்தின் ஆராதனை மண்டபத்துக்கான ஒலிபரப்பு கட்டமைப்பை உருவாக்க 2 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு மருதமுனை அல்–ஹம்றா வித்தியாலய அதிபர் எம்.எம். முஹம்மட் நியாஸ் தலைமையில் நேற்று (03) அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த இரண்டு லட்சம் ரூபா நிதியை பலாங்கொடை மஜிஸ்ரேட் நீதிமன்ற பதில் நீதிபதியும் சப்ரகமுவ பல் கலைக்கழக பேரவை உறுப்பினரும், மருதமுனை அல்–ஹம்றா வித்தியாலயத்தின் பழைய மாணவருமான சிரேஷ்ட சட்டத்தரணி அல்ஹாஜ் எம்.எம். றபீக் அன்பளிப்பு செய்திருந்தார்.

இந்த உபகரணங்களை சிரேஷ்ட சட்டத்தரணி அல்ஹாஜ் எம்.எம்.றபீக் சார்பாக பழைய மாணவர் சங்க செயலாளரும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினருமான எம். என்.எம். வஸீம் பாடசாலை அதிபரிடம் கையளித்தார்.

இதில் பழைய மாணவர் சங்க உப தலைவரும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினருமான நழீம் எம். பதுருத்தீன், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் தாதி உத்தியோகத்தர் பி. எம்.நஸ்றுதீன், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பகுதித் தலைவர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷர்ரப் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்தார்.காரைதீவு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோஸ்தர்களும் விளையாட்டுக்கழக பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

# நீர்கொழும்பு ஒரியன்ட் லயன்ஸ் கழக தலைவராக கலாநிதி ஹிரான் பீற்றர்!

(ஹஸ்பர்)

நீர்கொழும்பு ஒரியன்ட் லயன்ஸ் கழகத்தின் 2024 - 2025 ஆம் ஆண்டுக்கான தலைவராக பிரபல சமூக செயற்பாட்டாளர் கலாநிதி ஹிரான் பீற்றர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க ஈகில் லகூன் விடுதியில் நடைபெற்ற நிகழ்வில் தலைவர் பதவி இவருக்கு உத்தியோக பூர்வமாக வழங்கப்பட்டது.

இளம் பராயம் தொடக்கம் சமூக செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திய இவர் லயன்ஸ் கழகத்தில் இணைந்து செயற்பட்டதுடன் மிக குறுகிய காலத்தில் இப்பதவியை இளம்பராயத்தில் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.





# மாணவர்களது கல்வி தொடர்பில் கல்முனையில் நடமாடும் சேவை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பாடசாலை மாணவர்களின் எதிர்காலக் கல்வி மற்றும் இடை விலகல் தொடர்பான நடமாடும் சேவை கல்முனை இஸ்லாமாபாத் பிரதேசத்தில் நடைபெற்றது.

இஸ்லாமாபாத் பிரதேசத்திலுள்ள வீடுகளுக்கு சென்று பாடசாலை செல்லும் மாணவர்கள் தொடர்பாக தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அவர்கள் கல்வியைத் தொடர்வதில் உள்ள இடர்பாடுகளும் இதன் போது ஆராயப்பட்டன.

இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி கள உத்தியோகத்தர்கள், உளவள உத்தியோகத்தர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் கள், பொது சுகாதார பரிசோதகர்கள், மாவட்டம் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், முறைசாரா கல்வி நடவடிக்கைக்கு பொறுப்பான உத்தியோகத்தர், மற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் கிராம சேவை உத்தியோஸ்தர்கள் கலந்து கொண்டனர்.



# உயர் கல்வி திட்டங்கள் தொடர்பாக மாலைதீவு அதிகாரிகளுடன் ஆய்வு!

(எம். எப். றிபாஸ்)



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகார பணிப்பாளரும், மெட்ரோபொலிடன் கல்லூரியின் தவிசாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப்புக்கும் மாலைதீவு நாட்டின் முன்னாள் அமைச்சர்களான மரியம் சகிலா மற்றும் சிஹாதா ஸ்ரீப் ஆகியோருக்கும் இடையிலான சினேக பூர்வ சந்திப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இரு நாடுகளுக்கும் இடையிலான சமூக சேவைகள், அபிவிருத்தி மற்றும் உயர் கல்வித் திட்டங்கள் தொடர்பிலான பல்வேறுபட்ட விடயங்கள் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் பொருளாதார ரீதியாக எதிர் நோக்கும் சவால்கள், வாழ்வாதார பிரச்சினைகள் சம்பந்தமாகவும் விரிவாக ஆராயப்பட்டு எதிர் காலத்தில் குறித்த கோரிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்துவதாகவும் மாலைதீவு பிரமுகர்கள் கூறினர்.




# ‘சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள்’ கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு

பன்னூலாசிரியரும் ஒலி, ஒளி பரப்பாளருமான அஷ்ரப் சிஹாப்தீனின் ‘சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள்’ எனும் கவிதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 07 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பு 09 தெமடகொட வீதி, வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் வகவம் தலைவர் கவிமணி என். நஜ்முல் ஹுஸைன் தலைமையில் நடைபெற வுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் வர்த்தக, வாணிப அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், விசேட அதிதியாக மீன்பிடித்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி. அனுஷா கோகுல பெர்ணாண்டோ ஆகியொர் கலந்து கொள்வர்.

கௌரவ அதிதிகளாக ரூபவாஹினி சி.பி.எம். ஷியாம், மாஷா பில்டர்ஸ் எம். எச்.எம். அன்ஸார், சட்டத்தரணி எம். என்.எம், பிஷ்ருல் அமீன் , தகிரேட் இன்டியா செய்தித் தளத்தைச் சேர்ந்த எஸ். ஆர். எம்.எம். இர்ஷாத், பிஸ்னஸ் வேர்ல்ட் இன்டர்நெஷனல் ரகு இந்திரகுமார், ஜப்பான் லங்கா என்டர்பிரைஸஸ் மொஹமட் மில்ஹான் , கவிஞர் நாச்சியாதீவு பர்வீன், திருமதி சப்ரின் ரின்ஸா செல்வி, டீன் நூர் கனி ஆகியோர் பங்கு கொள்ளவுள்ளனர்.

வரவேற்புரையை கவிஞர் சிமாரா அலியும் வாழ்த்துரையை மாத்தளை எம்.எம். பீர்முகம்மது வழங்கவுள்ளனர்.

நூல் பற்றிய உரைகளை எழுத்தாளர் பூர்ணிமா கருணாகரன், கவிஞர் எஸ்.ஏ.சி.பி. மரிக்கார் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். நிகழ்ச்சித் தொகுப்பு திருமதி ஆஷிகா பர்ஸான்.

# 26 சுற்றுலா கடற்கரை வலயங்கள் உருவாக்கத் திட்டங்கள் ஆரம்பம்!

இந்த ஆண்டில் அடையாளம் காணப்பட்ட 26 சுற்றுலா கவர்ச்சிகரமான கடற்கரை வலயங்கள் உருவாக்கப்படும். 26 கரையோர வலயங்களின் அபிவிருத்திக்கான அடிப்படை வடிவமைப்புகள் மற்றும் கட்டமைப்புத் திட்டங்கள் இந்த நாள்களில் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களம் இணைந்து இதனை நடைமுறைப்படுத்துகின்றன.

வனாத்தவில்லு ஆற்றின் வாடி, வனாத்தவில்லு களப்பு தீவு, கல்பிட்டி குடா , கல்பிட்டி வைகால, நீர்கொழும்பு தடாகம், நீர்கொழும்பு கபுங்கொட, வத்தளை பிரிதிபுர, பெந்தோட்ட கடற்கரை, ஹபராதுவ கொக்கல லகூன், திக்வெல்ல சீதாகால்ல, தங்கல்ல ரெகவ லகூன், அம்பலாங்கொடை லூனம லகூன், ஹம்பாந்தோட்டை மலல லேயாவ, திஸ்ஸமஹாராம கிரிந்த வெலி மலை லாஹுகல குனுக்கல கடற்கரை, பொத்துவில் எலிபெண்ட் ரொக், மட்டக்களப்பு கோறளைப்பற்று வடக்கு சல்லதீவு, கிண்ணியா தம்பலகமுவ குடா, திருகோணமலை ஆளுநரின் அலுவலகப் பகுதி, திருகோணமலை உப்புவெளி, திருகோணமலை சம்பல் தீவு, குச்சிவெளி அரிசிமலை முல்லைத் தீவு நாயாறு குடா, முல்லைத்தீவு நந்திக் கடல் குடா, யாழ்ப்பாணம் சென்னக் குளம் கடற்கரை, யாழ்ப்பாணம் கசூரினா கடற்கரைஆகிய கரையோரப் பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.


கடலோர சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் வகையில் இந்தத் திட்டம் தனியார் துறையுடன் இணைந்து முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வருடம் இரணைவில, உப்பாறு, கீரிமுண்டலம், மூதூர், காரைதீவு, நிந்தவூர், புஸ்ஸ, தல்தியவத்தை, கொக்கல, சாய்ந்தமருது, மாளிகைக் காடு,காத்தான்குடி,உஸ்வெட்டகெய்யாவ ஆகிய கரையோரங்களில் 14 அவசர கால கரையோர பாதுகாப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அபிவிருத்திப் பணிகளுக்காக 520 மின் அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வருடம் 30 கடற்கரை துப்புரவு வேலைத் திட்டங்களும் 04 சதுப்புநிலத் தாவரங்கள் நடுகை வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களம் தெரிவித்துள்ளது. இதற்காக 300 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களம் 11 கடலோரப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. களுத்துறை கலிடோ, லுனாவ, வடக்கு உடப்பு, நிந்தவூர், சாய்ந்தமருது, மூதூர், மெடிஹ, முதுகடுவ, கங்கவ, இரணைவில மற்றும் பண்டாரமுல்ல ஆகிய பிரதேசங்களில் இந்தத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


GSM GUNAAM'S SUPERMARKET
குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998

# பாடசாலை பல் மருத்துவ பிரிவு சாய்ந்தமருதுக்கு இடம் மாற்றம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பல் மருத்துவ பிரிவுகள் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியிலும் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலத்திலும் இயங்கி வந்ததன.

சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலய அதிபர் யூ. எல். நசாரின் வேண்டுகோளுக்கு இணங்க குறிப்பிட்ட பல் சிகிச்சை பிரிவானது முன்னாள் அதிபர் நஸ்லின் ரிப்கா அன்சாரின் ஒத்துழைப்போடு மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டது.

தற்போது சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியால அதிபர் எம்.எஸ். எம். நபாரின் எழுத்து மூல வேண்டுகோளுக்கு இணங்க இடப் பற்றாக்குறை காரணமாக சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு மாணவர்களுக்கான பல் மருத்துவப் பிரிவு மாற்றப்பட்டுள்ளது. வழமை போல் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் மாணவர்களுக்கான பல் மருத்துவ சிகிச்சை இடம்பெறும் என்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அர்ஸத் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

# இந்தியப் பிரஜைகளுக்கான ‘ஓப்பின் ஹவுஸ்’ கலந்துரையாடல்

(வாஸ் கூஞ்ஞ)

வடக்கு மாகாணத்தில் வசிக்கும் மற்றும் தொழில் காரணமாக தங்கியிருக்கும் இந்தியப் பிரஜைகளுக்கான தூதரக விடயங்களுக்கான ‘ஓப்பின் ஹவுஸ்’ கலந்துரையாடல் தொடர்பாக யாழ். இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களான யாழ்ப்பாணம், மன்னார் , முல்லைத்தீவு , கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் மற்றும் பணிபுரியும் இந்திய பிரஜைகள் எதிர்நோக்கும் ஏதேனும் கடவுச்சீட்டு, தூதரக விவகாரங்கள் அல்லது அவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளைப் பூர்த்திச் செய்யும் நோக்கில் இல. 14 , மருதடி லேன் , யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் 10 மணி முதல் 11 மணி வரை ‘ஓப்பின் ஹவுஸ்’ கூட்டம் நடைபெறவுள்ளது.

குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டகளில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளின் விசா, தூதரக சேவைகள் போன்ற சான்றொப்பம் போன்றவை தொடர்பான குறைகள், வேண்டுகைகள் போன்றவை இந்த கூட்டங்களில் போது பூர்த்தி செய்யப்படும் எனவும் இதில் பங்கேற்க விரும்புவர்கள் உறுதிப்படுத்த 021222 0504 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளும்படியும் வேண்டப்பட்டுள்ளனர்.





# இணையத்தளம்சார் வன்முறைகளும் அதற்கான தீர்வுகளும்!

தொழில்நுட்பங்கள் வளர்ந்து வருகின்ற இன்றைய காலட்டத்தில் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப மனிதனும் மாறிவருகின்றான். இன்றைய தலைமுறையினரின் வாழ்க்கையில் 24 மணி நேரமும் இணையப் பயன்பாடு என்பது தவிர்க்க முடியாத விடயமாக மாறிவிட்டது.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள்வரை அனைவரும் பயன்படுத்தும் விடயமாக இணையம் எமது வாழ்வியலில் புகுந்துவிட்டது. இதனால் மனிதர்களுக்கு இடையிலான தொடர்பு பெருமளவில் தவிர்க்கப்பட்டுத் தனி மனிதர்களும் இணையத்துக்கு இடையிலான தொடர்புகள் வலுப்பெற்றுவிட்டன. இதன் காரணமாக மனித குலம் இணையத்தோடு இசைவாகிவிட்டது.

பொருட்களை கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல், எமக்கு தேவையான தகவல்களை நிகழ்நிலையில் பார்த்தல், நிகழ்நிலை கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுதல், அனைத்து விளையாட்டு, வெளிநாட்டு தகவல்களை இணையத்தைப் பயன்படுத்திக் கண்டுகளித்தல், வங்கிச்செயற்பாடுகளில் ஈடுபடுதல், மருத்துவ ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுதல், வீட்டில் இருந்தே இணையத்தை பயன்படுத்தித் தொழிலில் ஈடுபடுதல் போன்ற அனைத்து செயற்பாடுகளையும் இணையம் இலகுவாக்கிவிட்டது. யார் எங்கிருந்தாலும் நமக்கு தேவையான விடயங்களை ஒரு நொடிக்குள்ளே கொண்டுவந்து கைக்குள் வைக்கும் பாரிய சக்தியாக இணையம் காணப்படுகின்றது.

இணையத்தால் சாதகமான விளைவுகள் காணப்பட்டாலும் இதில் பாதகமான விளைவுகளும் காணப்படுவதை இந்தச் சமூகம் பார்ப்பதற்கு மறுக்கின்றது. அந்த வகையில் இணையப் பாவனையின் போது பெண்களை இலக்கவைத்து மேற்கொள்ளப்படும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளும், துன்புறுத்தல்களும் கடந்தஆண்டுகளுடன் ஒப்பிடும்போது நடப்பு ஆண்டில் பல மடங்கு அதிகரித்துள்ளதை அறிய முடிகின்றது. Sri Lanka Computer Emergency Readiness (SL Cert) இன் தரவுகளின் படி hacking, Cyber bulling, போலியான கணக்குகள் செயற்பாடுகளின் ஊடாக இணைய வன்முறைகள் மேற்கொள்ளப்படும் சம்பவங்கள் பெருமளவில் அதிகரிக்கின்றன என தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான இணைய வன்முறைகள் குறுஞ்செய்திகள், Facebook, WhatsApp குழுக்கள், YouTube மற்றும் இணையத் தளங்களின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன.

இணையத்தின் ஊடாக ஒரு நபரை கேலி செய்தல், மிரட்டுதல், வற்புறுத்திக் கதைக்க வைத்தல், ஆபாச படங்களை அனுப்புதல், ஆபாச வீடியோக்களை அனுப்புதல், பாலியல் தொந்தரவை ஏற்படுத்தக் கூடிய மாதிரியான பேச்சுகளை மேற்கொள்ளுதல், போலியான பெயரில் கதைத்தல், ஓர் நபரின் கணக்குகளை ஹேக் செய்து அவர் தொடர்பான தனிப்பட்ட தகவல்களை பெற்றுக் கொள்ளுதல் , தனிப்பட்ட புகைப்படங்களை அவரின் அனுமதி இன்றி இணையத்தில் பதிவேற்றுதல், திட்டமிட்ட வகையில் கூட்டாக இணைந்து பலரால் இணையப் பொது வெளியில் விமர்சிக்கப்படுதல், இணையத்தின் ஊடாக அவதூறு பரப்புதல், வெறுப்பு பேச்சுக்களுக்கு உட்படுத்தப்படுதல், தனிப்பட்ட வாழ்க்கையின் போது அல்லது பொது வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட விடயங்களைத் தரவேற்றல், சமூக ஊடகக் கணக்குகளை ஹேக் செய்தல், கணினிக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான மென்பொருள்களைப் பரப்பி விடுதல், தனிநபர்களின் கணக்குகளுக்குள் அனுமதி இன்றி ஊடுருவிச் செல்லுதல், புகைப்படங்களை ஆபாசமாக மாற்றுதல், Muffing செய்தல் போன்ற அனைத்தும் இணையக் குற்றங்களுக்குள் உள்ளடங்கும்.

இணையத்தை அனைவரும் அணுகக் கூடிய வசதி வந்த பிறகு அனைவரும் இணையக் குற்றங்களில் ஈடுபடக் கூடிய வசதியும் வளர்ந்துவிட்டது. குற்ற புலனாய்வு திணைக்களத்தின் 2019 ஆம் ஆண்டு தரவுகளின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டு பெறப்பட்ட முறைப்பாடுகளில் 70 வீத பெண்களுக்கு எதிரான ஆபாச படங்கள், வீடியோக்கள் பதிவேற்றம் தொடர்பாக இருந்துள்ளதுடன் இதற்குப் பிரதான காரணமாகக் காதல் உறவுகளில் ஏற்பட்ட முரண்பாடுகள் அமைந்திருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

தொடர்ச்சி▼

# இணையத்தளம்சார் வன்முறைகளும் அதற்கான தீர்வுகளும்!

தொடர்ச்சி▲

"இணையம் எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதாக இருக்கிறது. அதேபோலத்தான் அதனுடன் இணைந்து வரும் வன்முறைகளையும் இந்த வன்முறைச் செயல்களில் ஈடுபடுபவர்களையும் பூகோள அல்லது பௌதிக எல்லைகளால் கட்டுப்படுத்த முடியவில்லை" என்கிறார் பிரிட்டனின் முன்னாள் அரசு தலைமை வழக்கறிஞரும் வீட்டுக்குள் நடக்கும் வன்முறைகளுக்கு எதிரான கூட்டணி என்ற அமைப்பின் நிறுவுனருமான பேட்ரி ஷியா ஸ்காட்லண்ட் அம்மையார்.

"தொலைபேசி மற்றும் இணையம் போன்றன சக்தி வாய்ந்த கருவிகளாக மட்டுமல்லாது அவை மிகப்பெரிய ஆயுதங்களாகவும் இருக்கக் கூடும்" என ஐக்கிய நாடுகள் மன்றம் பெண்களுக்கு எதிராக இணையத்தி உருவாகும் வன்முறையை பற்றி எச்சரிக்கை ஒன்றையும் விட்டிருக்கின்றது.

மேலும் தெரிவிக்கையில் "தொலைத்தொடர்பு இணைப்பு என்பது எல்லா இடங்களிலும் கிடைக்கும் தற்போதைய காலகட்டத்தில் தொழில் நுட்பமும் பெண்கள் மற்றும் சிறுமிகளின் மீது ஊறு விளைவிக்கும் ஒரு கருவியாக மாறிவிட்டது" எனவும் எச்சரிக்கை விடுகின்றது.

"உலகெங்கும் ஏற்கனவே பல கோடிக்கணக்கான பெண்கள் அவர்கள் பெண்களாக இருப்பதால் பாலியல் ரீதியான வீட்டுக்குள் நடக்கும் வன்முறைகளுக்கு இலக்காகின்றார்கள். இது இப்போது தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகங்களின் வளர்ச்சி என்பது அத்தகைய வன்முறை செய்ய புதிய வழிகளை தந்துள்ளது. இந்த பிரச்சினையைப் பற்றி உலக அளவில் விழித்துக் கொள்ள வேண்டிய நேரம் இது" என்கின்றது ஐ.நா.

"இணையத்தின் மூலமான வன்முறைகளின் காரணமாக மூவரில் ஒரு பெண் பாதிக்கப்படும் நிலையில் உலக சுகாதார நிறுவனம் பெண்களுக்கு எதிரான (வீட்டில் நடக்கும் வன்முறை, வீதிகளில் நடக்கும் தொல்லை, பாலியல் வர்த்தகர், கற்பழிப்பு மற்றும் பெண் சிசுக்கொலை) வன்முறையை, கொள்ளை நோய் போன்ற அளவிலான ஒரு உலக சுகாதாரப் பிரச்சினை" என்று கூறுகிறது.

Cyber rap எனப்படும் இணையப் பக்கத்தில் பாதிக்கப்படும் பெண்களின் அளவு அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இதன் மூலம் பாதிக்கப்படும் பெண்களில் 10 வீத மக்களிடையே இணையப் பாதிப்பு பற்றிய விழிப்புணர்வு காணப்படவில்லை. தாம் பாதிக்கப்படுவது தெரிந்தாலும் அதனை பெற்றோரிடம் கூறி நடவடிக்கை எடுக்க தயங்குபவர்களாக 46 வீதமானோர் காணப்படுகின்றனர். 35 வீதமானவர்கள் எதிர்தாக்குதல் கொடுக்கவும் புகார் கொடுக்கவும் தயங்காமல் முன்வருகின்றனர். வருடம் ஒன்றுக்கு 9 கோடி பெண்கள் Cyber rap ஆல் பாதிக்கப்படுகின்றனர் என ஐ.நா. சபையின் ஆய்வறிக்கை கூறுகின்றது.

இணையத்தில் பாலியல் வன்முறை தண்டிக்கப்படாத நாடுகளில் 74 வீதமான மக்கள் வசிக்கின்றனர். நீதிமன்றம் அல்லது பொலிஸ் போன்ற அமைப்புக்களின் மூலம் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறுகின்றனர் . 65 வீத பெண்கள் இணைய வன்



முறையைப் பற்றி புகார் செய்வதில் சமூக பின் விளைவுகளுக்கு பயந்து வாழ்கின்றார்கள்.

இவ்வாறான நிலையில் இணைய வன்முறைகளில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான சில வழிமுறைகள் பின்வருமாறு, சமூக வலைத்தளங்களில் எமக்குத் தெரிந்தவர்களின் நட்புக் கோரிக்கைகளை மாத்திரம் அங்கீகரித்தல், முகநூல் மற்றும் இதர சமூகவலைத்தளங்களில் ஆலோசனைகளை துண்டித்து வைத்தல், கடவுச்சொற்களை இலக்கம் மற்றும் எழுத்துக்கள் இணைந்த வகையில் அமைத்தல், கடவுச் சொற்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் , கடவுச் சொற்களைப் பகிர்வதைத் தவிர்த்தல், பாதுகாப்பான இணையத்தள தேடல்களை மேற்கொள்ளுதல் (https), தெரியாத நபர்களிடம் இருந்து கிடைக்கப்பெறும் குறுஞ்செய்திகளுக்கு பதிவிடுவதைத் தவிர்தல், இணையத் தளங்களில், செயலிகளில் தனியுரிமைக் கொள்கை (Privacy Policy) எனும் ஒரு ஆவணம் காட்சிப்படுத்தப்படுதல் , போலி சமூக வலைத்தளங்களின் கணக்குகளை முறையீடு (Report) செய்தல், Two Step Verification Code பயன்படுத்தல்,ஜீமெயில் போன்ற தானியங்கியாக ஸ்பேம் மின்னஞ்சல்களைப் பிரித்தெடுக்கும் சேவையொன்றைப் பாவித்தல் போன்றவற்றை நாம் செய்ய முடியும்.

இணையக்குற்றம் தொடர்பான மேலதிக ஆலோசனைகளைப் பெறுவதற்கு 011-421-6062 எனும் தொலைபேசி இலக்கத்தை அழைக்க முடிவதுடன் , https://www.telligp.police.lk/ எனும் முகவரிக்குச் சென்று அங்குள்ள மாதிரிப் படிவத்தின் மூலம் Cybercrime ஐத் தெரிவு செய்து சாட்சிகளுடன் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யவும் முடியும், குற்றவியல் ஆராய்ச்சித் திணைக்களத்தின் (CID) சமூக ஊடகப் பிரிவுக்கு dir.cid@police.lk எனும் மின்னஞ்சல் முகவரியினூடாகவோ அல்லது 011 233 7432 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ தெரிவிக்கவும் முடியும்.

இணையக் குற்றச் செயல்களில் நாம் ஈடுபடாமல் இருப்பதுடன் இணைய வன்முறைகளில் இருந்து நாம் பாதுகாப்பதுடன் மாத்திரம் அல்லாது எம்மைச் சார்ந்தவர்களும் உதவி செய்து இணைய வன்முறை அற்ற சமூகத்தைக் கட்டியெழுப்பத் துணை நிற்போம்.

**கனிஷ்ரா ஜெயகாந்தன்**
**ஊடகத்துறை மாணவி,**
**மூன்றாம்வருடம்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

# காணாமல்போன இளம் யுவதி கொல்லப்பட்டார் எனச் சந்தேகம்

## பாழடைந்த கிணற்றைத் தோண்டுவதற்கு நீதிமன்றம் அனுமதி

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை,சேருவில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தங்கநகர் பகுதியைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவர் காணாமல் போயுள்ளார் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நடேஸ்குமார் வினோதினி (வயது -25) என்னும் இளம் பெண் ஒருவரே காணாமல் போயுள்ளார் என்று அவரது குடும்பத்தினர் சேருவில மற்றும் மூதூர் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணையை முன்னெடுத்துவரும் மூதூர் பொலிஸார் சந்தேகத்தின்பேரில் கிளிவெட்டியைச் சேர்ந்த நபர் ஒருவரை கைது செய்து விசாரணை மேற்கொண்டனர்.

அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் கிளிவெட்டி கிராமத்தின் எல்லைப் புறத்தில் உள்ள பாழடைந்த கிணற்றைத் தோண்டுவதற்கு நீதிமன்ற அனுமதியை பொலிஸார் பெற்றுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த கிணற்றடியில் நேற்று புதன்கிழமை (3) முதல் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இந்தக் கிணறானது நாளை (5) வெள்ளிக்கிழமை காலை மூதூர் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் தோண்டப்படவுள்ளது என்று மூதூர் பொலிஸார் கூறினர்.

சேருவில பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தங்கநகர் கிராமத்தைச் சேர்ந்த நடேஸ்குமார் வினோதினி (வயது 25) என்ற குறித்த யுவதியும், மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட அயல் கிராமமான கிளிவெட்டி கிராமத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவரும் காதலித்து வந்ததாகவும் தெரிய வருகின்றது.

இந்த நிலையில் கடந்த மே மாதம் குறித்த யுவதி காதலனுடன் மட்டக்களப்புக்குச் சென்று வசித்து வந்ததுள்ளார்.

மே மாதம் 31 ஆம் திகதி மாலை அழுத நிலையில் குரல் பதிவொன்றை குடும்பத்தாருக்கு அனுப்பியுள்ளார். அன்றைய தினம் இரவு வீடியோ அழைப்பில் குடும்பத்தாருடன் கதைத்துள்ளார்.விரைவில் வீட்டுக்கு வருவதாக கூறியுள்ளார்.அதன் பின்னர் அவருடன் தொடர்பு இல்லாமல் போயுள்ளது என குடும்பத்தினர் கூறினர்.

இந்த நிலையில் குறித்த காதலனின் இலக்கத்துக்கு யுவதியின் குடும்பத்தார் பல முறை தொடர்பை ஏற்படுத்த முயற்சித்தனர். எனினும் அந்த இளைஞர் ஜூன் மாதம் 13ஆம் திகதி அழைப்பை எடுத்து தான் வேலையில் நிற்பதாகவும், வீட்டுக்குச் சென்று அக்காவுடன் கதைக்க கொடுப்பதாகவும், காணமல் போயுள்ள யுவதியின் தம்பியிடம் கூறியுள்ளார்.

இதன் பின்னர் எவ்வித தொடர்பும் இல்லாத நிலையில் சேருவில மற்றும் மூதூர் பொலிஸ் நிலையங்களில் தாம் கடந்த முதலாம் திகதி முறைப்பாடு செய்தனர் என்று யுவதியின் குடும்பத்தினர் கூறினர்.

காணாமல் போயுள்ள யுவதி, கொலை செய்து போடப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் குறித்த கிணறானது, ஜே.சி.பி. இயந்திரத்தின் உதவியுடன் அருகில் இருந்த குப்பைகளைக் கொண்டு, மூடப்பட்டுள்ளதாகவும் சந்தேகம் வெளியிடப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் குறித்த காதலன் தலைமறைவாகியுள்ளார். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# அக்கரைப்பற்றில் பாராட்டிக் கௌரவிப்பு

**(றிஸ்வான் சாலிஹூ)**

நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை யின் அக்கரைப்பற்று பிராந்திய முகா மையாளராகச் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் பிரதம பொறியியலாளர் யூ.கே.எம். முஸா ஜித்தீனின் சேவை நலன் பாராட்டு நிகழ்வு, பிராந்திய முகாமையாளர், அலுவலக உத்தி யோகத்தர்களின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று ரீ.எப்.சீ மண்டபத்தில் சிரேஷ்ட பொறியியலாளர் பி.மயூரதன் தலைமையில் நேற்று புதன்கிழமை (03) நடைபெற்றது.

பொத்துவில் தொடக்கம் மத்திய முகாம் வரையுள்ள அக்கரைப்பற்று பிராந்தியத்தில் உள்ள மூவின மக்களுக்கும் இலங்கையில் ஏற்பட்ட கொவிட்- 19 அசாதாரண காலப் பகுதி மற்றும் இந்தப் பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்த நிலையில் கூட பொது மக்களுக்கு எவ்வித தடையும் இன்றி தொடர்ச்சியாக நீரையை வழங்கியவர்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் டீ.ஏ.பிரகாஷ், புதிய பிராந்திய முகாமையாளர் ஐ.எல். ஹைதர் அலி, பொறியியலாளர்கள்,



வாணிப உத்தியோகத்தர், கணக்காளர், சமூகவியலாளர், பொறியியல் உதவியாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிராந்திய முகாமையாளரின் சேவையை பாராட்டி பிரதம அதிதியால் பொன்னாடை போர்த்தி, ஞாபக சின்னம் வழங்கப்பட்டது.







# சிலாபத்தில் கோர விபத்து! ஒருவர் பலி!! 35 பேர் காயம்!!!

சிலாபம் – கொழும்பு பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் 35 பேர் காயமடைந்தனர்.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விபத்து இன்று காலை மாதம்பே – இரட்டைக்குளம் பகுதியில் இடம்பெற்றது.

அதிவேகமாக வந்த லொறி ஒன்று எதிர்த் திசையில் வந்த பஸ்ஸுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

காயமடைந்தவர்கள் சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விபத்து இடம்பெற்றபோது அப்பகுதியில் மழையுடன் கூடிய காலநிலை காணப்பட்டது என்று மாதம்பே பொலிஸார் தெரிவித்தனர்.



# அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்குக் கௌரவிப்பு

(எம். எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற ஆசியர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (03) பிரதி அதிபர் எம்.எச். றசாம் ஒருங்கமைப்பில் இடம்பெற்றது. இந்த நிகழ்வானது பாடசாலையின் கேட்போர் கூடத்தில் அதிபர் ஏ.எல். பாயிஸ் தலைமையில் இடம்பெற்றது.



இந்த நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர்.ஓய்வு பெற்றுச் சென்ற ஆசிரியர்களுக்குப் பொன்னாடை, நினைவுச்சின்னம், வாழ்த்துப்பா என்பன வழங்கப்பட்டன.

# கவிதை நூல் வெளியீட்டு விழா

காயத்ரியின் 'இருட்டின் காதலி' கவிதை நூல் வெளியீட்டு விழா எதிரவரும் நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இல. 24, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் (யாழ். இந்துக் கல்லூரி முன்பாக) நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் கவிஞர் இ.த.ஜெயசீலன், கருத்துரையை அகஞ்சுரக்கும் தொகுதி விசேட மருத்துவ நிபுணர் ம.அரவிந்தன், கவிதை வாசிப்பை செ. ராகவேந்தன், நூல் அறிமுக உரையை ஆசிரியர் சிறீலேகா பேரின்பகுமார், நூல் மதிப்பீட்டுரையை பேராசிரியர் ச. முகுந்தன் ஆகியோர் ஆற்றுவர்.




# இந்திய அணி வீரர்களை நேரில் சந்தித்து வாழ்த்தைத் தெரிவித்தார் பிரதமர் மோடி!

புதுடெல்லி,ஜூலை04

டி20 உலகக்கிண்ணத்துடன் நாடு திரும்பிய இந்திய அணி வீரர்களுக்கு ரசிகர்கள் உற்சாக வரவேற்பை அளித்தனர்.

அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்ற டி20 உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டியில் தென்னாபிரிக்காவை 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்திய அணி சாம்பியன் பட்டத்தை வென்றது. இதன் மூலம் இந்திய அணி 17 வருடங்கள் கழித்து ரோகித் சர்மா தலைமையில் டி20 உலகக் கிண்ணத்தை வென்றுள்ளது. பார்படாஸில் இருந்து இந்திய அணி வீரர்கள் தனி விமானம் மூலம் நேற்று இந்தியா புறப்பட்டனர். இந்த நிலையில், இன்று காலை இந்திய அணி வீரர்கள் டெல்லி வந்தடைந்தனர்.

உலகக்கிண்ணத்துடன் நாடு திரும்பிய வீரர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்க ரசிகர்கள் அதிகாலை முதலே டெல்லி விமான நிலையம் வரத் துவங்கினர்.இதனிடையே விமான நிலையம் வந்தடைந்த இந்திய அணியினருக்கு ரசிகர்கள் உற்சாக வரவேற்பை அளித்தனர்.

இந்த நிலையில், இந்திய அணி வீரர்கள் டெல்லியில் இன்று பிரதமர் மோடியை சந்தித்தனர். உலகக்கிண்ணத்தை வென்ற இந்திய அணி வீரர்களுக்குப் பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்தார். இதனை தொடர்ந்து இன்று மாலை மும்பையில் இந்திய வீரர்கள் பேரணியாக, திறந்த வெளி பஸ்ஸில் டி20 உலகக்கிண்ணத்துடன் வலம் வருவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோடி விண்வெளிக்குச் செல்ல முன்னர் முதலில் மணிப்பூருக்கு செல்ல வேண்டும்

## ஜெய்ராம் ரமேஷ் கிண்டல்



புதுடெல்லி,ஜூலை04

விண்வெளிப் பயணத்தில் பிரதமர் மோடியும் இணையக்கூடும் என இஸ்ரோ தலைவர் சோம்நாத் தெரிவித்திருந்தார்.

மணிப்பூரில் இரு பிரிவினர் இடையே பல மாதங்களாக நீடித்து வரும் மோதல் போக்கு காரணமாக அங்கு இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பிரதமர் மோடி இதுவரை அங்கு செல்லாததை காங்கிரஸ் கட்சி தொடர்ந்து விமர்சனம் செய்து வருகிறது.

இந்த சூழலில் ககன்யான் திட்டத்தின் கீழ் விண்வெளிப் பயணத்தில் பிரதமர் மோடியும் இணையக்கூடும் என இஸ்ரோ தலைவர் சோம்நாத் தெரிவித்தார். சமீபத்தில் செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரோ தலைவர் சோம்நாத், “விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் இந்தியாவின் ககன்யான் திட்டம் வரும் 2025ம் ஆண்டு செயல்படுத்தப்பட உள்ளது. இந்த திட்டத்தின் கீழ் விண்வெளிக்குச் செல்லும் மனிதர்களில் பிரதமர் நரேந்திர மோடியும் ஒருவராக இருக்க வாய்ப்பு உள்ளது. பிரதமர் மோடிக்கு பல முக்கிய பொறுப்புகள் இருக்கின்றன. இருந்தாலும், ககன்யான் விண்வெளித் திட்டத்தில், சர்வதேச விண்வெளி நிலையத்திற்கான விண்வெளி வீரர் பயிற்சித் திட்டத்தில் அவர் இணைய வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். நாட்டின் தலைவரை நம்பிக்கையுடன் விண்வெளிக்கு அனுப்பும் திறன் என்பது, நாம் அனைவரும் மிகவும் பெருமைப்படக்கூடிய ஒன்று” என்று அவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இந்த செய்தியை தனது எக்ஸ் வலைதளத்தில் டேக் செய்த காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ஜெய்ராம் ரமேஷ், “விண்வெளி செல்வதற்கு முன்னதாக பிரதமர் நரேந்திர மோடி மணிப்பூருக்கு செல்ல வேண்டும்” என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக இந்தியாவின் சார்பில் முதன்முறையாக மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் திட்டமான ககன்யான் திட்டத்தில், இஸ்ரோ தீவிரமாக பணியாற்றி வருகிறது. இதற்கான சோதனைகள் ஏறத்தாழ அனைத்தும் வெற்றிகரமாக முடிந்துள்ள நிலையில், விரைவில் இந்திய மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல விண்வெளிக்கு செல்லும் வீரர்களையும் கடந்த பெப்ரவரி மாதம் பிரதமர் நரேந்திர மோடி அறிமுகப்படுத்தி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.







# பிரிட்டனில் ஆட்சியைக் கைப்பற்றுவது யார்? மிக விறுவிறுப்பாக வாக்குப்பதிவு நடக்கின்றது






லண்டன்,ஜூலை04

பிரிட்டனில் நாடாளுமன்ற தேர்தல் இன்று நடைபெறுகிறது. உள்ளூர் நேரப்படி காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. மொத்தம் உள்ள 650 நாடாளுமன்ற தொகுதிகளுக்கும் புதிய உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க மக்கள் ஆர்வமுடன் வாக்களித்துவருகின்றனர்.

பிரிட்டன் பொதுத் தேர்தலில் இந்திய வம்சாவளியான பிரதமர் ரிஷி சுனக்கின் கன்சர்வேட்டிவ் கட்சிக்கும், தொழிலாளர் கட்சிக்கும் நேரடி போட்டி நிலவுகிறது.

பிரதமர் ரிஷி சுனக் தன் மனைவி அக்சதா மூர்த்தியுடன், நார்த் யார்க்ஷைரில் உள்ள ரிச்மாண்ட் அருகே உள்ள வாக்குச்சாவடிக்கு சென்று வாக்களித்தார். இதேபோல் அரசியல் கட்சிகளின் தலைவர்களும், வேட்பாளர்களும் தங்கள் பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடிகளில் வாக்களித்தனர்.

இந்தத் தேர்தலில் இந்திய வம்சாவளியான பிரதமர் ரிஷி சுனக்கின் கன்சர்வேட்டிவ் கட்சியும் தொழிலாளர் கட்சியும் நேருக்கு நேர் மோதுகின்றன. 14 ஆண்டுகால கன்சர்வேடிவ் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர தொழிலாளர் கட்சி தீவிர பிரசாரம் மேற்கொண்டது.

இரு கட்சிகள் சார்பிலும் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் உள்பட பல்வேறு நாடுகளில் இருந்து பிரிட்டனில் குடியேறியவர்களுக்கும், கறுப்பினத்தவர்களுக்கும் தேர்தலில் போட்டியிட முன்பைவிட அதிக வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் இருந்து பிரிட்டனில் குடியேறியவர்களுக்கும், தமிழ் வம்சாவளியை சேர்ந்தவர்களுக்கும் வாய்ப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. உமா குமரன், கவின் ஹரன், மயூரன் செந்தில் நாதன், கமலா குகன், டெவினா பால், நரணி குத்ரா ராஜன், கிரிஷ்ணி, ஜாஹிர் உசேன் ஆகிய 8 தமிழர்கள் போட்டியிடுகின்றனர்.

பிரதமர் ரிஷி சுனக் மற்றும் தொழிலாளர் கட்சி தலைவர் கீர் ஸ்டார்மர் ஆகியோர் பிரதமர் பதவிக்கான முக்கிய போட்டியாளர்களாக உள்ளனர். இவர்கள் தவிர நைகல் பரேஜ், ஜான் ஸ்வின்னி, எட் டாவே, கார்லா டெனியர் உள்ளிட்ட முக்கிய தலைவர்களும் களத்தில் உள்ளனர்.

இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து மற்றும் வடக்கு அயர்லாந்தில் உள்ள 650 நாடாளுமன்ற தொகுதிகளில், 326 தொகுதிகளில் வெற்றி பெறும் கட்சி ஆட்சியமைக்கும். எந்த கட்சியாலும் பெரும்பான்மை பெற முடியாவிட்டால், தற்போதைய பிரதமர் ஆட்சியில் தொடரவேண்டும்.

இந்த தேர்தலில் தொழிலாளர் கட்சிக்கே வெற்றி வாய்ப்பு அதிகம் என்று பெரும்பாலான கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. 1997ல் முன்னாள் தலைவர் டோனி பிளேர் 18 ஆண்டுகால கன்சர்வேடிவ் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்த போது, தொழிலாளர் கட்சி பெற்ற சாதனையான 418 இடங்களை விட அதிக இடங்களில் வெற்றி பெறும் என்று சில கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன. எனவே, கன்சர்வேட்டிவ் கட்சி படுதோல்வியை சந்திக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று இரவு 10 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும். வாக்குப்பதிவு முடிந்ததும் வாக்கு எண்ணிக்கை தொடங்கும். ஒரு சில மணி நேரத்தில் முன்னிலை நிலவரம் வெளியாகி கிட்டத்தட்ட வெற்றியை உறுதி செய்யும். துல்லியமான முடிவுகள் நாளை தெரியவரும். அதேசமயம், இன்று வாக்குப்பதிவு முடிந்ததும், தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் வெளியாகும். இது, இறுதி முடிவு குறித்த வலுவான கணிப்பை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பக்கங்கள் - 4

கனடா முரசு

வியாழக்கிழமை 04/07/2024

## கரீபியன் தீவுகளுக்கான பயணத்தை தவிர்க்கும்படி கோருகின்றது கனடா

**ஒன்ராரியோ, ஜூலை 4**


ஜமைக்கா உட்பட சில நாடுகளுக்கு அத்தியாவசியமற்ற பயணத்தை தவிர்க்குமாறு கனடிய வெளிவிவகார அமைச்சு எச்சரித்துள்ளது.

C2▶

# யோர்க் திரையரங்கு மீது மீண்டும் துப்பாக்கிச் சூடு

## இரண்டு மாத காலத்தில் நான்காவது முறை

CLICK HERE VIDEO



**ஒன்ராரியோ, ஜூலை 4**

ரிச்மண்ட் ஹில் நகரில் உள்ள தமிழர்களின் திரையரங்கில் இரண்டு மாத காலத்தில் நான்கு முறை துப்பாக்கி சுட்டுச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஈஸ்ட் பீவர் கிரிக் மற்றும் ஹைவே 7 சந்திப்புக்கு அருகில் உள்ள யோர்க் திரையரங்கில் இந்த சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

இந்த சம்பவங்கள் குறித்த விசாரணைகளை யோர்க் பிராந்திய பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இறுதியாக ஜூன் 29ஆம் திகதி அதிகாலை 3:15 மணியளவில் துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெற்றது.

முன்னதாக மே 17, 19, 24 ஆம் திகதிகளில் துப்பாக்கி சுட்டு

C2▶



# நாட்டை ஆட்சி செய்வதிலேயே தமது கவனம் என்கிறார் ட்ரூடோ

## இடைத் தேர்தல் தோல்வியினால் அவருக்குக் கடும் அழுத்தம்

**கியூபெக், ஜூலை 4**

**நாட்டை ஆட்சி செய்வதிலேயே தனது கவனம் உள்ளதாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.**

**கடந்த வாரம் டொரன்டோ - சென் போல்ஸ் தொகுதியின் இடைத் தேர்தலில் லிபரல் கட்சி தோல்வியடைந்தது.**

**இந்தத் தோல்வியின் பின்னர் ட்ரூடோவின் பதவி குறித்த பல கேள்விகள் எழுந்துள்ளன.**

C2▶

# டொராண்டோ பல்கலையில் தமது முகாம்களை பலஸ்தீனிய சார்பு எதிர்ப்பாளர்கள் விலக்கினர்!

## நீதிமன்றக் காலக்கெடுவுக்கு ஒரு மணி நேரம் முன்னதாக

**ஒன்ராரியோ, ஜூலை 4**

டொராண்டோ பல்கலைக் கழகத்தின் நகர வளாகத்தில் இரண்டு மாதங்களாக முகாமிட்டுள்ள பலஸ்தீனிய சார்பு எதிர்ப்பாளர்கள் நேற்றைய தினம் தங்கள் உடைமைகளை எடுத்துக் கொண்டு முகாம்களை அகற்றும் நீதிமன்ற உத்தரவுக்கு இணங்குவதாகக் கூறியுள்ளனர்.

நீதிமன்றத்தால் காலக்கெடு அளிக்கப்பட்ட மாலை 6 மணிக்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக ஏற்பாட்டாளர்கள் தங்கள் முடிவை அறிவித்தனர்.

காலக்கெடு, பின்னர்

C2▶






# முற்போக்குக் கன்சர்வேட்டிவ் கட்சியின் நடவடிக்கை குறித்து கமாரி ஏமாற்றம்!

**ஒன்ராரியோ, ஜூலை 4**

கட்சியின் ஒன்ராரியோ மாகாண சபை குழுவில் இருந்து விலக்கப்பட்டமை குறித்து ஒன்ராரியோ மாகாண சபை உறுப்பினர் கோல்டி கமாரி ஏமாற்றம் வெளியிட்டுள்ளார்.

முற்போக்கு கன்சர்வேட்டிவ் கட்சியின் மாகாண சபை குழுவில் இருந்து மாகாண சபை உறுப்பினர் கோல்டி கமாரி கடந்த வாரம் விலக்கப்பட்டார்.

இது தொடர்பில் மௌனம் காத்து வந்த கமாரி, இந்த நடவடிக்கையால் ஏமாற்றமடைந்தார் எனவும், தொடர்ந்து சுயேச்சையாக செயல்பட உள்ளார் எனவும் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

முதல்வர் டக் ஃபோர்ட்டின் இந்த முடிவு ஒரு தலைப்பட்சமானது எனவும் அவர் விமர்சித்துள்ளார்.

2018 முதல் கார்ல்டன் தொகுதியை முற்போக்கு கன்சர்வேட்டிவ் கட்சியின் மாகாண சபை உறுப்பினராக கமாரி பிரதிநிதித்துவப்படுத்தி வருகிறார்.

இங்கிலாந்தின் தீவிர வலது சாரி ஆர்வலர் டொமி ரொபின்சன் உடனான சந்திப்பு புகைப்படத்தை கமாரி அண்மையில் வெளியிட்டிருந்தார்.

இதன் பின்னணியில முற்போக்கு கன்சர்வேட்டிவ் கட்சியின் மாகாண சபை குழுவில் இருந்து கோல்டி கமாரி விலக்கப்பட வேண்டும் என கனடிய முஸ்லிம்கள் தேசிய சபை வலியுறுத்தியது.

ஆனாலும் இந்த சந்திப்பின் முன்னர், டொமி ரொபின்சன் பின்னணி குறித்து தான் அறிந்திருக்கவில்லை என கமாரி கூறியிருந்தார்.

கனடாவில் மக்கள் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஈரானிய – கனடிய பெண் கமாரி என்பது குறிப்பிடத்தக்கது.

---

**யோர்க் திரையரங்கு...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

சம்பவங்கள் இடம்பெற்றன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நான்கு வெவ்வேறு வாகனங்களில் சென்ற சந்தேக நபர்கள் யோர்க் திரையரங்கின் முன் கதவு, ஜன்னல்களை நோக்கி துப்பாக்கியால் சுடுவதை அவதானித்ததாக யோர்க் பிராந்திய பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த சம்பவங்களில் எவருக்கும் யாருங்கள் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

---

**பலஸ்தீன...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

ஒரு பேரணியுடன் நடத்தப்பட்டது, இது ஒரு பெரிய கூட்டத்தை அப்பகுதிக்கு ஆதரவை வெளிப்படுத்தியது.

‘பொலிஸாருடன் மோதலைத் தவிர்ப்பதற்காக காலக்கெடுவிற்கு முன்னதாக வெளியேற முடிவு செய்ததாக’ முகமது யாசின் கூறியுள்ளார்.

‘எங்கள் சமூகத்தைப் பாதுகாக்க நாங்கள் எங்கள் நிபந்தனைகளின் அடிப்படையில் வெளியேறுகிறோம்,’ என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

‘கோடைகால மாநாட்டு காலத்தில் நாங்கள் தொடர்ந்த ஆக்கிரமிப்பு ஒரு மகத்தான வெற்றியாகும்,’ என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மாலை 6 மணிக்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் தளத்தை விட்டு வெளியேறவில்லை என்றால், பொலிஸார் நடவடிக்கை எடுப்பதற்கு நீதிமன்ற தடை உத்தரவு அதிகாரம் அளித்துள்ளது.

இந்த உத்தரவை அமல்படுத்துவோம் என்று பொலிஸாரும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

**நாட்டை ஆட்சி...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இந்தத் தோல்வி குறித்து விவாதிக்க லிபரல் கட்சியின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தை நடத்துவது குறித்து கருத்து தெரிவிக்க பிரதமர் மறுத்துள்ளார்.

இது போன்ற ஒரு கூட்டத்திற்கான வலியுறுத்தல் கட்சியின் பல மட்டங்களிலும் தொடர்ந்து எதிரொலித்து வருகிறது.

லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தனிப்பட்ட முறையில் இத்தகைய கூட்டத்தை கோரியுள்ளனர்.

வேறு சிலர் அமைச்சரவை மாற்றமொன்றை வலியுறுத்துகின்றனர்.

இந்த நிலையில் டொரன்டோ – சென் போல்ஸ் தொகுதி இடைத்தேர்தல் குறித்துலிபரல்கட்சிநாடாளுமன்றஉறுப்பினர்களிடம் தொலைபேசியில் உரையாடி வருவதாக ட்ரூடோ தெரிவித்தார்.

கருத்துக் கணிப்புகளில் பிரதமருக்கு ஆதரவு குறைந்து வரும் நிலையில் பதவி விலகுமாறு வெளியாகும் கோரிக்கைகளை அவர் தொடர்ந்து நிராகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

---

**கரீபியன் தீவுகளுக்கான...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

பெரில் சூறாவளி தென்கிழக்கு கரீபியன் தீவு நோக்கி வீசும் நிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பெரில் சூறாவளி காரணமாக கரீபியன் தீவுகள், ஜமைக்கா, சென்ட் வின்சென்டில் உள்ள யூனியன் தீவு, கிரனாடின்ஸில் உள்ள கிரனாடின்ஸ் கரியாக்கோவ், பெட்டி மார்டினிக் ஆகிய இடங்களுக்கு இந்த அத்தியாவசியமற்ற பயண எச்சரிக்கைகள் நடைமுறையில் உள்ளன.

கனடியர்கள் ஹெய்ட்டிக்கான அனைத்து பயணங்களையும் தவிர்க்குமாறும் எச்சரிக்கப்பட்டனர்.

சூறாவளி தவிர கடத்தல்கள், குழு வன்முறை, உள்நாட்டு அமைதியின்மை ஆகியவற்றால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் காரணமாக இந்த பயண எச்சரிக்கை நடைமுறையில் உள்ளது.






# ஹெலிக்கொப்டர் விபத்தில் விமானி பலி; இருவர் காயம்!

## அல்பேர்ட்டா எல்லைக்கு அருகில் சம்பவம்

**பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூலை 4**

பிரிட்டிஷ் கொலம்பியா, அல்பேர்ட்டா எல்லைக்கு அருகே இடம்பெற்ற ஹெலிக்கொப்டர் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன், இருவர் காயமடைந்துள்ளனர்.

ஜூலை 2ஆம் திகதி மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனியாருக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் இரவு 7 மணியளவில் விபத்துக்குள்ளானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தேடுதல், மீட்பு குழுவினர் அப்பகுதிக்கு அனுப்பப்பட்ட நிலையில் விபத்துக்குள்ளான ஹெலிக்கொப்டர் கண்டுபிடிக்கப்பட்டது.

ஹெலிக்கொப்டர் விமானி இந்த விபத்தில் மரணமடைந்துள்ளார்.

இதில் உயிர் பிழைத்த பயணிகள், உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.



# முன்னைய வதிவிடப் பாடசாலைகளின் இணைய வரைபடம் அறிமுகமாகின்றது

## மறக்கப்பட்ட கல்லறைகளைத் தேட இது உதவுமாம்

ஒன்ராரியோ, ஜூலை 4

வதிவிடப் பாடசாலைகளின் இருப்பிடத்தைக் குறிக்கும் புதிய இணைய வரைபடத்தை கனடிய அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

நிறுவனங்களுக்குச் செல்ல கட்டாயப்படுத்தப்பட்ட குழந்தைகளின் குறிக்கப்படாத அல்லது மறக்கப்பட்ட கல்லறைகளைத் தேட இது உதவும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

1830களில் கனடாவில் முதன் முதலில் திறக்கப்பட்ட வதிவிடப் பாடசாலைகள் 1990களின் நடுப்பகுதியில் மூடப்பட்டது முதல் பல வதிவிடப் பாடசாலைக் கட்டடங்கள் இடிக்கப்பட்டன. நடைபாதை அல்லது கட்டுமானங்கள் கட்டப்பட்டுள்ளன.

இந்த வதிவிடப் பாடசாலைகளின் வரைபடம் தேடுபவர்களுக்கு முந்தைய கட்டடங்களின் துல்லியமான இருப்பிடங்களைப் பெற இந்தப் புதிய வரைபடம் உதவும்.

பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் மானுடவியல் பேராசிரியரான ஆண்ட்ரூ மார்டின்டேல், 'இது மிகவும் மதிப்புமிக்க ஆதாரம்' எனத் தெரிவித்துள்ளார்.

'ஒரு கல்லறை அல்லது புதைக்கப்பட்டதற்கான ஆதாரங்களை நாங்கள் கண்டறிந்தால், 1930 களில் கட்டடங்களுடன் ஒப்பிடும்போது அது எங்குள்ளது என்பது எங்களுக்குத் தெரிந்தால், 'இது இன்று எங்கே இருக்கிறது?' என்று கூறுவதற்கு இதுபோன்ற தகவல்களைப் பயன்படுத்தலாம்' என அவர் மேலும் கூறியுள்ளார்.



# கனடியப் பாதுகாப்புப் படைகளின் தலைமைப் பொறுப்பில் பெண்மணி

**ஒன்ராரியோ, ஜூலை 4**

கனடிய பாதுகாப்பு படைகளின் தலைவராக லெப்டினன்ட் ஜெனரல் ஜென்னி கரிக்னன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன் மூலம் கனடிய ஆயுதப் படையின் உயர் பதவி வகிக்கும் முதல் பெண்மணி என்ற பெருமையை அவர் பெறுகிறார்.

மத்திய அரசாங்கம் நேற்று (ஜூலை 3) இந்த அறிவித்தலை வெளியிட்டது.

தற்போது இராணுவத்தின் தொழில் முறை நடத்தை பிரிவின் தலைவராக ஜென்னி கரிக்னன் உள்ளார்.

இந்தப் பதவி பாதுகாப்பு படைகளில் முன்வைக்கப்பட்ட பாலியல் நடத்தை தவறு நெருக்கடியை அடுத்து உருவாக்கப்பட்டது.

2021ஆம் ஆண்டில் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டதால், பல உயர்மட்ட தலைவர்கள் தங்கள் பதவிகளில் இருந்து விலக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

தனது 38 ஆண்டுகால இராணுவ வாழ்க்கையில், ஜென்னி கரிக்னன் கனடிய இராணுவத்தில் ஒரு போர் படைக்கு தலைமை தாங்கிய முதல் பெண்மணி ஆனார்.

ஜூலை 18 நடைபெறும் விழாவில் ஜென்னி கரிக்னன் அதிகாரப்பூர்வமாக ஆயுதப் படைகளின் தலைமை பொறுப்பை ஏற்க உள்ளார்.

இது குறித்து கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஜென்னி கரிக்னன், அவரது தொழில் வாழ்க்கையில், அவரது தலைமைத்துவ குணங்கள், சிறந்து விளங்குவதற்கான அர்ப்பணிப்பு மற்றும் சேவைக்கான அர்ப்பணிப்பு ஆகியவை நமது ஆயுதப்படைகளுக்கு மிகப்பாரிய சொத்தாக இருந்தன" என்று கூறியுள்ளார்.

பாதுகாப்புச் செலவினங்களை அதிகரிக்க கனடா சர்வதேச அழுத்தத்தை எதிர்கொள்வதால், ஒரு முக்கியமான கட்டத்தில் கரிக்னன் தலைமை ஏற்கிறார்.

கனேடிய ஆயுதப் படைகள் ஆள் சேர்ப்பு சவால்கள் மற்றும் காலாவதியான உபகரணங்களை நவீனமயமாக்குவதில் தாமதம் ஆகியவற்றுடன் போராடுகின்றன.

2018-ஆம் ஆண்டில், ராயல் கனடியன் மவுண்டட் காவல்துறையின் முதல் பெண் தலைவராக பிரெண்டா லக்கியை ட்ரூடோ நியமித்தார்.

பிரிட்டிஷ் முடியாட்சியின் உத்தியோகபூர்வ பிரதிநிதிகளாக பணியாற்றும் கடைசி இரண்டு கவர்னர் ஜெனரல்களும் பெண்களாக இருந்தனர். இருவரும் கனேடிய பிரதமரால் பெயரிடப்பட்டனர்.

# வழக்கமான நீர் பயன்பாட்டிற்கு அவசரப்பட்டுத் திரும்பாதீர்கள்!

## கல்கரி மேயர் வலியுறுத்தல்

**அல்பேர்ட்டா, ஜூலை 4**

குடியிருப்பாளர்கள் வழக்கமான நீர் பயன்பாட்டிற்குத் திரும்புவதில் மெதுவாக செல்லுமாறு கல்கரி மேயர் வலியுறுத்தியுள்ளார்.

உட்புற நீர் பயன்பாட்டிற்கான அனைத்து கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டாலும், நகரம் இன்னும் முழுமையாக இயல்பு விநியோகத்திற்கு திரும்பவில்லை என மேயர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வெளிப்புற நீர்ப்பாசனத்திற்கான தடை நடைமுறையில் உள்ளது என்று மேயர் ஜோதி கோண்டேக் கூறியுள்ளார்.

ஒரு மாதத்திற்கு முன்பு பழுதடைந்த



நீர் விநியோகத்தை மாற்றிய புதிய குழாயை நிலைநிறுத்துவதற்கு பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்,

இதனால் குடியிருப்பாளர்கள் தண்ணீர் பயன்பாட்டை 25 சதவீதம் குறைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.